

# ஸதக்கத்துல் ஃபித்ர்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# ஸதக்கத்துல் ஃபித்ர் 1

## ஸதக்கத்துல் ஃபித்ர் - நோக்கம்

நோன்பாளியிடமிருந்து ஏற்பட்ட வீணான காரியங்களை விட்டும் நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும், ஏழைகளுக்கு உணவாகவும் நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் ஃபித்ரா தர்மத்தை விதியாக்கினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், இப்னுமாஜா 1827

# ஸதக்கத்துல் ஃபித்ர் 2

## பெருநாள் தொழுகைக்கு முன் கொடுக்க வேண்டும்

மக்கள் பெருநாள் தொழுகைக்குப் புறப்படுவதற்கு முன்பே நோன்புப் பெருநாள் தர்மம் வழங்கப்பட வேண்டும் என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1802

# ஸதக்கத்துல் ஃபித்ர் 3

## பெருநாளைக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் கொடுத்தல்

நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் நோன்புப் பெருநாள் தர்மமாகப் பேரீச்சம் பழத்தையே கொடுத்துவந்தார்கள்.

மதீனா நகர மக்களுக்குப் பேரீச்சம் பழத் தட்டுப்பாடு வந்தபோது, தீட்டாத (வாற்)கோதுமையைக் கொடுத்தார்கள்.

(தம் குடும்பத்திலுள்ள) சிறியவர்களுக்காகவும், பெரியவர்களுக்காகவும், (அவருடைய பணியாளராக நானிருந்ததால்) என் குழந்தைகளுக்காகவும் கொடுத்துவந்தார்கள். இந்தத் தர்மத்தைப் பெற்றுக்கொள்பவருக்கெல்லாம் கொடுத்துவந்தார்கள்.

மேலும், பெரு நாளுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னரே நபித்தோழர்கள் (இந்தத் தர்மத்தைக்) கொடுத்துவந்தார்கள்.

**புகாரி 1511**

# ஸதக்கத்துல் ஃபித்ர் 4

## ஸதக்கத்துல் ஃபித்ரின் அளவு

முஸ்லிம்களில் அடிமை, சுதந்திரமானவர், ஆண், பெண், சிறியவர், பெரியவர் ஆகிய அனைவருக்காகவும் ஒரு ‘ஸாஉ’ அளவு பேரீச்சம் பழம் அல்லது ஒரு ‘ஸாஉ’ அளவு தொலி நீக்கப்படாத கோதுமையைப் பெருநாள் தர்மமாக (ஏழைகளுக்கு வழங்க வேண்டுமென்று) அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் நிர்ணயித்தார்கள்.

அதை(ப் பெருநாள்) தொழுகைக்காக மக்கள் வெளியேறுவதற்கு முன்பே கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், புகாரி 1503

# ஸதக்கத்துல் ஃபித்ர் 5

நாங்கள் நோன்புப் பெருநாள் தர்மமாக ஒரு ஸாஉ அளவு ஏதேனும் உணவையோ, அல்லது ஒரு ஸாஉ அளவு தொலி நீக்கப்படாத கோதுமையையோ, அல்லது ஒரு ஸாஉ அளவு பேரீச்சம் பழத்தையோ, அல்லது ஒரு ஸாஉ அளவு பாலாடைக் கட்டியையோ, அல்லது ஒரு ஸாஉ அளவு உலர்ந்த திராட்சையையோ வழங்கி வந்தோம்.

அறிவிப்பாளர் : அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள், புகாரி 1506

# ஸதக்கத்துல் ஃபித்ர் 6

நோன்பாளியிடமிருந்து ஏற்பட்ட வீணான
காரியங்களை விட்டும், தீய வார்த்தைகளை விட்டும்
நோன்பாளியைத் தூய்மைப்படுத்தவும்,
ஏழைகளுக்கு உணவாகவும் நபி(ﷺ) அவர்கள்
ஸகாத்துல் ஃபித்ரைக் கடமையாக்கினார்கள்.

யார் அதை பெருநாள் தொழுகைக்கு
முன் கொடுத்து விட்டாரோ அது
ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.

யார் அதை பெருநாள் தொழுகைக்குப் பின்
கொடுப்பாரோ அது பொதுவான தர்மங்களில் ஒரு
தர்மமாகும் என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் , அபூதாவுத் 1609